# ஐந்திணை எழுபது

##1
அவரை பொருந்திய பைங்-குரல் ஏனல்
கவரி மட-மா கடூஉம் படர் சாரல்
கானக-நாட வயங்கிழை-க்கு
யான்-இடை-நின்ற-புணை

##2
கொல்லை ப் புனத்த அகில் சுமந்து கல் பாய்ந்து
வானின் அருவி ததும்ப கவினிய
நாடன் நயம்-உடையன் என்பதனால் நீப்பினும்
வாடல் மறந்தன தோள்

##3
இலை அடர் தண்-குளவி வேய்ந்த பொதும்பு-இல்
குலை-உடை-க்-காந்தள் இன-வண்டு இமிரும்
வரையக-நாடன்-உம் வந்தான் மற்று அன்னை
அலையும்-அலை போயிற்று இன்று

##4
மன்ற-ப்-பலவு-இன் சுளை விளை தீம்-பழம்
உண்டு உவந்து மந்தி முலை வருட கன்று அமர்ந்து
ஆ-மா சுரக்கும் அணி-மலை-நாடன்-ஐ
யாம்-ஆ-ப்-பிரிவது-இலம்

##5
சான்றவர் கேண்மை சிதைவு-இன்று-ஆய் ஊன்றி
வலி-ஆகி பின்னும் பயக்கும் மெலிவு இல்
கயம் திகழ் சோலை-மலை-நாடன் கேண்மை
நயம் திகழும் என்னும் என்-நெஞ்சு



---------------------------------------
keyed-in and segmented by v.s.r

##6
பொன்–இணர்–வேங்கை கமழும் நளிர்–சோலை
நல்–மலை–நாட மறவல் வயங்கிழை–க்கு
நின்–அலது–இல்லை–ஆல் ஈயாய்–ஓ கண்ணோட்டத்து
இன்–உயிர் தாங்கும் மருந்து

##7
காய்ந்தீயல் அன்னை இவள்–ஓ–தவறு–இலள்
ஓங்கிய செந்–நீர் இழிதரும் கான்–யாற்றுள்
தேம் கலந்து வந்த அருவி குடைந்து ஆட
தாம் சிவப்பு உற்றன கண்

##8
வெறி கமழ் தண்–சுனை தெண்–நீர் துளும்ப
கறி வளர் தேமா–நறுங்–கனி வீழும்
வெறி கமழ் தண்–சோலை–நாட ஒன்று–உண்டு–ஓ
அறிவு–இன்–கண் நின்ற மடம்

##9
மன்ற–த்–துறுகல் கருங்–கண் முசு உகளும்
குன்றக–நாடன் தெளித்த தெளிவு–இன்–ஐ
நன்று என்று தேறி த் தெளிந்தேன் தலை–அளி–
ஒன்று மற்று–ஒன்று–உம்–அனைத்து

##10
பிரைசம் கொள வீழ்ந்த தீம்–தேன்–இறுஅல்
மரை–ஆன்–குழவி குளம்பு–இன் துகைக்கும்
வரையக–நாட வரையாய் வரின் எம்–
நிரைதொடி வாழ்தல்–இலள

##11
கேழல் உழுத கரி–புன–க்–கொல்லை–உள்
வாழை முது–காய் கடுவன் புதைத்து அயரும்

தாழ்–அருவி–நாடன் தெளி–கொடுத்தான் என்–தோழி
நேர்–வளை நெஞ்சு ஊன்று கோல்

##12
பெருங்–கை–இருங்–களிறு ஐவனம் மாந்தி
கருங்–கால் மராம் பொழில் பாசடை த் துஞ்சும்
சுரும்பு இமிர் சோலை மலை–நாடன் கேண்மை
பொருந்தினர்–க்கு ஏமாப்பு உடைத்து

##13
வார்–குரல்–ஏனல் வளை–வாய்–க்–கிளி கவரும்
நீர்–ஆல் தெளி திகழ் கான்–நாடன் கேண்மை–ஏ
ஆர்வத்தின்–ஆர–முயங்கினேன் வேலன்–உம்
ஈர–வலித்தான் மறி

##14
குறை–ஒன்று உடையேன்–மன் தோழி நிறை–இல்லா
மன்னுயிர்–க்கு ஏமம்–செயல்–வேண்டும் இன்னே
அரா வழங்கு நீள்–சோலை–நாடன்–ஐ நம்–இல்
இரா வாரல் என்பது உரை

##15
செங்–கதிர்–ச்–செல்வன் சினம் கரந்த–போழ்து–இன்–ஆல்
பைங்–கொடி–முல்லை மணம் கமழ வண்டு இமிர
கார்–ஓடு அலமரும் கார்–வானம் காண்–தொறும்
நீர்–ஓடு அலமரும் கண்

##16
தட–மென்–பணை–த்–தோளி நீத்தார்–ஓ வாரார்
மட–னடை–மஞ்ஞை அகவ கடல் முகந்து
மின்–ஓடு வந்தது எழில் வானம் வந்து என்னை
என்–ஆதி என்பார்–உம் இல்

##17
தண்-நறுங்-கோடல் துடுப்பு எடுப்ப கார்-எதிரி
விண்-உயர்-வானத்து உரும் உரற்ற திண்ணிதின்
புல்லுநர்-இல்லார் நடுங்க சிறு-மாலை
கொல்லுநர் போல வரும்

##18
கதழ் உறை வானம் சிதற இதழகத்து த்
தாது இணர் க் கொன்றை எரி வளர்ப்ப பாஅய்
இடிப்பது போலும் எழில் வானம் நோக்கி
துடிப்பது போலும் உயிர்

##19
ஆலி விருப்பு-உற்று அகவி புறவு-எல்லாம்
பீலி பரப்பி மயில் ஆல சூலி
விரிகுவது-போலும் இ-க்-கார் அதிர ஆவி-
உருகுவது போலும் எனக்கு

##20
இனத்த அருங்-கலை பொங்க புனத்த
கொடி மயங்கு முல்லை தளிர்ப்ப இடி மயங்கி
யான்-உம் அவர்-உம் வருந்த சிறு-மாலை
தான்-உம் புயல்-உம் வரும்

##21
காரிகை-வாட த் துறந்தார்-உம் வாரா-முன்
கார்-க்-கொடி முல்லை-எயிறு-ஈன கார்-ஒடு
உடன்பட்டு வந்து அலைக்கும் மாலை-க்கு-ஓ எம்மின்
மடம்-பட்டு வாழ்கிற்பார் இல்

##22


keyed-in and segmented by v.s.r

கொன்றை க் குழல் ஊதி க் கோவலர்—பின் நிரைத்து
கன்று அமர் ஆயம் புகுதர இன்று
வழங்கிய—வந்தன்று மாலை யாம் காண
முழங்கி வில்—கோலிற்று—வான்

##23
தேரை த் தழங்—குரல் தார் மணி வாய் அதிர்ப்ப
ஆர்—கலி—வானம் பெயல்—தொடங்கி கார் கொள
இன்று ஆற்ற வாரா—விடுவார்—கொல் காதலர்
ஒன்றாலும் நில்லா வளை

##24
கல்—ஏர்—புறவு—இல் கவினி புதல்—மிசை
முல்லை தளவு—ஒடு போது அவிழ எல்லி
அலைவு—அற்று—விட்டன்று வானம்—உம் உண்கண்—
முலை—வற்று—விட்டன்று—நீர்

##25
...
##26
...
##27
கார்ப்பு—உடை—ப்—பாண்டில் கமழ புறவு—எல்லாம்
ஆர்ப்பு—ஒடு இன—வண்டு இமிர்ந்து ஆட நீர்த்து—அன்றி
ஒன்றாது அலக்கும் சிறு—மாலை மால்—உழந்து
நின்றாக—நின்றது—நீர்

##28
குருந்து அலை வான்—பதலை சூடி ச் சுரும்பு ஆர்ப்ப
ஆயன் புகுதரும்—போழ்து—இன்—ஆன் ஆயிழாய்
பின்னொடு நின்று ... படு மழை கொ...ல்
என்னொடு—பட்ட—வகை

##29

---------------------------------------



keyed-in and segmented by v.s.r

எழுத்து–உடை–க்–கல் நிரைக்க வாயில் விழு த் தொடை
அ–ம்–மாறு அலைக்கும் சுரம் நிரைத்து அ–ம்–மா–ப்–
பெருந்–தகு–தாளாண்மை–க்கு ஏற்க அரும்–பொருள்–
ஆகும் அவர்–காதல்–அவா

##30
வில்–உழுது–உண்பார் கடுகி அதர் அலைக்கும்
கல் சூழ் பதுக்கை ஆர் அத்தத்து இறப்பார்–கொல்
மெல்–இயல் கண்ணோட்டம்–இன்றி பொருள்–கு இவர்ந்து
நில்லாத உள்ளத்தவர்

##31
பேழ்–வாய்–இரும்–புலி குஞ்சரம் கோள் பிழைத்து ப்
பாழ்–ஊர்–ப்–பொதியில் புகா ப் பார்க்கும் ஆர்–இடை
சூழா ப் பொருள்–நசை–க்–கண் சென்றோர் அருள் நினைந்து
வாழ்தி–ஓ மற்று என்–உயிர்

##32
நீர்–இல்–அருஞ்–சுரத்து ஆமான்–இனம் வழங்கும்
ஆர்–இடை அத்தம் இறப்பர்–கொல் ஆயிழாய்
நாண்–இன்–ஐ நீக்கி உயிர்–ஓடு–உடன்–சென்று
காண புணர்ப்பது–கொல் நெஞ்சு

##33
பொறி கிளர் சேவல் வரி–மரல் குத்த
நெறி தூர் அருஞ்–சுரம் நாம் உன்னி அறிவிட்டு
அலர்–மொழி ச் சென்ற கொடி–அக–நாட்ட
வலன்–உயர்ந்து–தோன்றும் மலை

##34
பீர்–இவர்–கூரை மறு–மனை ச் சேர்ந்து அல்கி
கூர்–உகிர்–எண்கு–இன் இருங்–கிளை கண்படுக்கும்
நீர் இல் அருஞ்–சுரம் முன்னி அறியார்–கொல்
ஈரம் இல் நெஞ்சினவர்

##35
சூரல் புறவு—இன் அணில் பிளிற்றும் சூழ் படப்பை
ஊர் கெழு சேவல் இதல்—ஒடு போர் திளைக்கும்
தேர்—ஓடு கானம் தெருள்—இலார் செல்வார்—கொல்
ஊர்—இடு—கவ்வை ஒழித்து

##36
முள்—உடை—மூங்கில் பிணங்கிய சூழ் படப்பை
புள்ளி வெருகு தன்—குட்டி—க்கு இரை பார்க்கும்
கள்ளர் வழங்கும் சுரம் என்பர் காதலர்—
உள்ளம் படர்ந்த நெறி

##37
பொரி—புற—ஓமை ப் புகர் படு நீழல்
வரி—நுதல்—யானை பிடி—ஒடு உறங்கும்
எரி மயங்கு கானம் செலவு உறைப்ப நில்லா
அரி—மயங்கு—உண்கண்—உள் நீர்

##38
கோள் வல் ... வய—மா க் குழூஉம்
தாள் வீ பதுக்கைய கானம் இறந்தார்—கொல்
ஆள்வினை—இன் ஆற்ற அகன்றவா நன்று உணரா
மீளி கொள் மொய்ம்பினவர்

##39
கொடுவரி பாய த் துணை இழந்து அஞ்சி
கடு—உணங்கு பாறை க் கடவு—தெவுட்டும்
நெடு—வரை—அத்தம் இறப்பர்—கொல் கோள்—மா ப்
படு—பகை பார்க்கும் சுரம்

##40
மன்ற முது—மரத்து—ஆந்தை குரல் இயம்ப
குன்றகம் நண்ணி குறும்பு இறந்து சென்றவர்


----------------------------------------
keyed-in and segmented by v.s.r

உள்ளிய–தன்மையர் போலும் அடுத்து–அடுத்து
ஒள்ளிய–தும்மல் வரும்

##41
பூங்கண்–இடம்–ஆடும் கனவு–உம் திருந்தின
ஓங்கிய–குன்றம் இறந்தார்–ஐ யாம் நினைப்ப
வீங்கிய மென்–தோள் கவினி ப் பிணி தீர
பாங்கத்து–ப்–பல்லி–படும்

##42
ஒல்லோம் என்று ஏங்கி உயங்கி–இருப்ப–வ்–ஓ
கல்–இவர்–அத்தம் அரி–பெய்–சிலம்பு ஒலிப்ப க்
கொல்–களிறு–அன்னான்–பின் செல்லும்–கொல் என்–பேதை
மெல்–விரல் சேப்ப நடந்து

##43
ஆற்றல்–உடையன் அரும்–பொறி–நல்–ஊரன்
மேற்று–ச்–சிறு–தாய–காய்வு அஞ்சி போற்று–உருவிக்
கட்டக–முத்து–இன் புதல்வன்–ஐ மார்பு–இன்–மேல்
பட்டம் சிதைப்ப வரும்

##44
அகன்–பணை–ஊரன்–ஐ த் தாமம் பிணித்தது
இகன்மை கருதி இருப்பல் முகன்–அமரா
ஏதில்–மகளிர்–ஐ நோவது எவன்–கொலோ
பேதைமை கண்டு ஒழுகுவார்

##45
போத்து–இல்–கழுத்து–இன் புதல்வன் உண ச் சான்றான்
மூத்தேம்–இனி–யாம் வரு–முலையார்–சேரி–உள்


---------------------------------------
keyed-in and segmented by v.s.r

நீத்து நீர் ஊன-வாய்-ப்-பாண நீ போய் மொழி
கூத்து-ஆடி உண்ணினும்-உண்

##46
உழலை முருக்கிய செந்-நோக்கு-எருமை
பழனம் படிந்து செய் மாந்தி நிழல் வதியும்
தண்-துறை-ஊரன் மலர்-அன்ன-மார்பு உற
பெண்டிர்-க்கு உரை பாண உய்த்து

##47
தேம் கமழ் பொய்கை அக-வயல் ஊரன்-ஐ ப்
பூங்கண்-புதல்வன் மிதித்து-உழக்க ஈங்கு த்
தளர்-முலை பாராட்டி என்னுடைய-பாவை
வளர்-முலை-க்-கண் ஞெமுக்குவார்

##48
பேதை புகலை புதல்வன் துணை ச் சான்றோன்
ஓதை மலி மகிழ்நன்-கு யாஅம் எவன்-செய்தும்
பூ ஆர் குழல் கூந்தல் பொன்-அன்னார்-சேரி-உள்
ஓவாது செல் பாண நீ

##49
யாணர்-நல்-ஊரன் திறம் கிளப்பல் என்னுடைய-
பாண இருக்க அது களை நாண்-உடையான்
தன்-உற்ற-எல்லாம் இருக்க இரும்-பாண
நின்-உற்றது-உண்டேல் உரை

##50
ஒள்-இதழ்-த்-தாமரை ப் போது உறழும் ஊரன்-ஐ
உள்ளம் கொண்டு உள்ளான் என்று யார்-க்கு உரைக்கோ
ஒள்ளிழாய்
அச்சு-ப்-பணி-மொழி உண்டேன்-ஓ மேல்-நாள் ஓர்-
பொய்-ச்-சூள் என அறியாதேன்

---------------------------------------

keyed-in and segmented by v.s.r

##51
பேதையர் என்று தமர்-ஐ ச் செறுப-வ்-ஓ
போது உறழ் தாமரை-க்-கண் ஊரன்-ஐ நேர்-நோக்கி
வாய்-மூடி-இட்டும்-இருப்ப-வ்-ஓ மாணிழாய்
நோவது-என் மார்பு அறியும் இன்று

##52
காதல்-இன் தீர க் கழிய முயங்கன்மின்
ஓதம் துவன்றும் ஒலி புனல் ஊரன்-ஐ ப்
பேதை ப் பட்டு ஏங்கன்மின் நீயிர்-உம் எண்-இலா-
ஆசை ஒழிய உரைத்து

##53
உள்-நாட்டம் சான்றவர் தந்த நசை இற்று என்று
எண்ணூர்-க்கு க் கண்ணோட்டம் தீர்க்குதும் என்று எண்ணி
வழிபாடு கொள்ளும் வள-வயல்-ஊரன்
பழி-பாடு நின்-மேலது

##54
உண் துறை ப் பொய்கை வராஅல்-இனம் இரியும்
தண்-துறை-ஊர தகுவது-ஓ ஒண்டொடி-ஐ ப்
பாராய் மனை துறந்து அ-ச்-சேரி ச் செல்வதனை
ஊராண்மை-ஆக்கி-க்-கொளல்

##55
பொய்கை-நல்-ஊரன் திறம் கிளத்தல் என்னுடைய-
எவ்வம் எனினும் எழுந்தீக வைகல்
மறு-இல்-பொலந்தொடி வீசும் அலற்றும்
சிறுவன்-உடையேன் துணை

##56

---------------------------------------



keyed-in and segmented by v.s.r

வள-வயல்-ஊரன் மருள்-உரை-க்கு மாதர்
வளைஇய-சக்கரத்து-ஆழி கொளை பிழையாது
ஒன்று-இடை-இட்டு வரும்-ஏல் நின்-வாழ்நாள்-கள்
ஒன்றி அனைத்தும் உளேன்

##57
ஒழுகு திரை க் கரை வான்-குருகு-இன் தூவி
உழிதரும் ஊதை எடுக்கும் துறைவன்-ஐ ப்
பேதையான் என்று உணரும் நெஞ்சம் இனிது உண்மை
ஊதியம்-அன்று-ஓ உயிர்-க்கு

##58
என்னை-கொல் தோழி அவர்-கண்-உம் நங்கு-இல்லை
அன்னை-முகன்-உம் அது-ஆகும் பொன் அலர்
புன்னை-அம்-பூங்-கானல்-சேர்ப்பன்-ஐ தக்க-தேர்
நின்-அல்லது-இல் என்று உரை

##59
இடு மணல் எக்கர் அகன் கானல் சேர்ப்பன்
கடு-மான் மணி அரவம் என்று கொடுங்-குழை
புள் அரவம் கேட்டு ப் பெயர்ந்தாள் சிறு-குடியர்
உள்-அரவம் நாணுவர் என்று

##60
மணி-நிற-நெய்தல் இருங்-கழி-ச்-சேர்ப்பன்
அணி நலம் உண்டு அகன்றான் என்-கொல் எம்-போல்
தணி மணல் எக்கர்-மேல் ஓதம் பெயர
துணி முந்நீர் துஞ்சாதது

##61
கண்-திரள்-முத்தம் பயக்கும் இரு-முந்நீர் ப்
பண்டம்-கொள்-நாவாய் வழங்கும் துறைவன்-ஐ
முண்டக-க்-கானல்-உள் கண்டேன் என த் தெளிந்தேன்
நின்ற-உணர்வு-இலாதேன்

##62
அடும்பு—இவர்—எக்கர் அலவன் வழங்கும்
கொடுங்—கழி—ச்—சேர்ப்பன் அருளான் என த் தெளிந்து
கள்ள—மனத்தான் அயல்—நெறி ச் செல்லும்—கொல்
நல்—வளை சோர நடந்து

##63
கள் நறு—நெய்தல் கமழும் கொடுங்—கழி—த்—
தண்—அம்—துறைவன்—ஓ தன்—இலன் ஆயிழாய்
வள்—நகை—ப்—பட்டதனை ஆண்மை என க் கருதி
பண் அமை த் தேர்—மேல் வரும்

##64
தெள்—நீர் இருங்—கழி வேண்டும்—இரை—மாந்தி
பெண்ணை—மேல் சேக்கும் வணர்—வாய் ப் புணர் அன்றில்
தண்—அம்—துறைவன்—கு உரையாய் மடமொழி
வண்ணம் தா என்று தொடுத்து

##65
எறி சுறு க் குப்பை இனம் கலக்க த் தாக்கும்
எறி திரை ச் சேர்ப்பன் கொடுமை அறியா—கொல்
கானகம் நண்ணி அருள்—அற்றிட—க்—கண்டும்
கானல்—உள் வாழும் குருகு

##66
நுண்—ஞாண்—வலை—இன் பரதவர் போத்தந்த
பல்—மீன் உணங்கல் கவரும் துறைவன்—ஐ க்
கண்—இன்—ஆல் காண அமையும்—கொல் என்—தோழி
வண்ணம் தா என்கம் தொடுத்து

----------------------------------------


keyed-in and segmented by v.s.r

##67
இவர்—திரை நீக்கியிட்டு எக்கர்—மணல்—மேல்
கவர்—கால்—அலவன் தன்—பெடை—ஒடு
தவழும் இருங்—கழி—ச்—சேர்ப்ப என்—தோழி
படர் பசலை பாயின்று தோள்

##68
சிறு—மீன் கவுள் கொண்ட செந்—தூவி—நாராய்
இறு—மென்—குரல நின்—பிள்ளைகட்கு—ஏ ஆகி
நெறி—னீர் இருங்—கழி—ச்—சேர்ப்பன் அகன்ற
நெறி அறிதி மீன்—தபு—நீ

##69
...

##70
...


vsr